தேசக்காற்றே   தேசக்காற்றே தேசக்காற்றே
தேசக்காற்றே தேசக்காற்றே தேகம் தளுவம்மா
தேசத்தலைவன் மூச்சில் கலந்து வேகம் காப்பா
காவல் தந்து வாளும் வீரன் கதையை சொல்லம்மா
காலம் முழுதும் எங்கள் அண்ணன் பக்கம் நில்லம்மா

எங்களுக்கு மனபலம் துணையிருக்கு
எங்களுக்கு மாவீரர் துணையிருக்கு
எங்களுக்கு மக்கள் பலம் துணையிருக்கு
எங்களுக்கு தலைவனின் துணையிருக்கு

தேசக்காற்றே தேசக்காற்றே தேசக்காற்றே
தேசக்காற்றே தேசக்காற்றே தேகம் தளுவம்மா
தேசத்தலைவன் மூச்சில் கலந்து வேகம் காப்பா

வன்னிக்காட்டு மயிலே கன்னிப் புற குயிலே
அண்ணனது எண்ணமது எங்க வீடு வளையே
கண்ணுக்குள்ளே எம்மை வச்ச காவியமே
கோணமலை அழகே யாழ்பாண கலையே
ஆண்ணனது வீரமது எங்க தேச உயிரே
காலம் தந்த தலைவன் எங்கள் தேசியமே
எங்க கரிகாலனெ ஈழ புலிச்சோழனே
தமிழ் குலம் காக்கும் பலம் ஆன மகராசனே
தமிழீழ மாமன்னன் மனம் போல் அழகேது
எங்கள் தலைவாசல் எமதாகும் காலம்  நீழாது

எங்களுக்கு மனபலம் துணையிருக்கு

அம்பாறை வயலே மட்டுநகர் வாவியே
அண்ணனது நெஞ்சமது பசுமையின் நிலமே
வெல்லும்வரை செல்வோம் என்ற போர் கலையே
மணல்ஆறு காடே மன்னரின் கடலே
அண்ணனது துணிவது பொங்கும் தமிழ் களமே
எங்கள் தேசம் காணச்செய்த மாமழையே
எங்க வரிவேங்கையே சீறும் புலி காங்கையே
தலை நிமிர்வான தமிழீழ மகராசனே
தர்மந் தான் மீண்டும் வெல்லும் தளைதல் குனியாது எங்க
தாய் மண்ணை மீட்கும் போரில் உணர்வுகள் பணியாது

எங்களுக்கு மனபலம் துணையிருக்கு